| | |
|---|---|
| **சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்** | |
| நாள் | 20.02.2025 |
| O.S. No. | 157/2004 |
| வா.சா.1 | வித்யா |

2025ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20–ம் நாள் வித்யா என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டின் 54வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின்படி திரு.எஸ்.ஜீவாபாண்டியன்,M.Com.,M.Phil.,M.L., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வித்யா | சமயம் | : |
| தந்தை பெயர் | ; | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூக்கா | : | | |

2 முதல் 5, 10, 11 மற்றும் 13ஆம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –

(சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது)

1. அண்ணாமலை முதலியார் எழுதி வைத்த உயில் ஆவணம் செல்லாது என கோபி மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும், இந்நீதிமன்றமும் முந்தைய வழக்குகளில் தீர்மானித்துள்ளதாக எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் நான் குறிப்பிட்டுள்ள அண்ணாமலை முதலியார் எழுதி வைத்த உயில் ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் **பி.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி உயில் ஆவணத்தின்படி, ஏ பட்டிகை சொத்தானது எனது அப்பாவான உலகநாதனுக்கு அவருடைய அம்மாவின் ஆயுட்காலத்திற்கு பின்னிட்டு கிடைக்கத்தக்கது என எழுதி வைக்கப்பட்டது ஆகும். மேற்படி உயில் ஆவணத்தின்படி, கிடைத்த சொத்தைக்குறித்து எனது அப்பா எனக்கு செட்டில்மென்ட் ஆவணம் எழுதி கொடுத்தாரா என்றால் இல்லை. 31.07.1985ஆம் தேதியில் ருக்குமணி மற்றும் சரஸ்வதி ஆகியோருக்கு எனது அப்பா செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தாரா என்றால் இல்லை.

ருக்குமணி எனது அப்பாவின் அம்மா ஆவார், சரஸ்வதி எனது அம்மா ஆவார்.

2. அண்ணாமலை முதலியார் எழுதி வைத்த உயில் ஆவணத்தில் பி பட்டிகை சொத்தானது ஆறுமுகம் மற்றும் சிவராமனுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் மேற்படி உயில் ஆவணம் செல்லத்தக்கதல்ல. மேற்படி பி பட்டிகை சொத்துதான் வழக்கு 3வது அயிட்ட சொத்து என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி உயில் செல்லாது என்றும் சொல்லும் நிலையில், மேற்படி உயிலை அடிப்படையாக வைத்துதான் நஞ்சை புளியம்பட்டியில் உள்ள சொத்தை நான் உட்பட எனது குடும்பத்தினர் விற்பனை செய்தோம் என்றால் எனக்கு தெரிந்து நான் விற்பனை செய்யவில்லை. மேற்படி உயிலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏ பட்டிகை சொத்தில்தான் நான் குடியிருந்து வருகிறேன் என்றால் நான் திருப்பூரில் வசிக்கிறேன், எனது அம்மா மேற்படி வீட்டில் வசித்து வருகிறார். உயிலின் அடிப்படையில் சொத்தை விற்பனை செய்துவிட்டும், மேற்படி உயிலின் அடிப்படையில் மேற்படி வீட்டில் வசித்துக்கொண்டும், தற்போது மேற்படி உயில் செல்லாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.
3. மேற்படி உயிலில் அண்ணாமலை முதலியாரின் 5 மக்கள் உள்ளனர் என்றும், அதில் 3 நபர்களுக்கு ஏற்கனவே சொத்துக்கள் உள்ளதாலும், மற்ற 2 நபர்களுக்கு மட்டும் சொத்துக்கள் இல்லாததால், ஆவணம் எழுதி வைப்பத்தாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அண்ணாமலை முதலியாரின் 5 மக்கள் உள்ளனர் என்றும், அதில் 3 நபர்களுக்கு ஏற்கனவே சொத்துக்கள் உள்ளதாலும், மற்ற 2 நபர்களுக்கு மட்டும் சொத்துக்கள் இல்லாததால், ஆவணம் எழுதி வைக்கப்பட்டுள்ளது சரியா என்றால் இல்லை, தவறு. வழக்கு சொத்துக்கள் அனைத்தும், அண்ணாமலை முதலியாருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சுயசம்பாத்திய சொத்து என்றால் சரிதான். அண்ணாமலை முதலியார் மேற்படி சொத்தை தனது 5 குழந்தைகளுக்கு எழுதி கொடுத்துவிட்டார் என்றால் இல்லை.
4. வழக்கு 1வது அயிட்ட சொத்தானது எனது தந்தைக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் எனது தாத்தாவான அண்ணாமலை முதலியார் வழியில் வந்த சொத்தாகும். வழக்குச் சொத்துக்கள் அனைத்தும், அண்ணாமலை முதலியாருக்கு சொந்தமான சொத்துக்கள் என்றும், அவருடைய வாரிசுதாரர்களுக்கு சுயமாக

பாத்தியப்பட்ட சொத்து இல்லை என்றால் சரிதான். அண்ணாமலை முதலியார் உயிருடன் இருக்கும்போதே தனது 5 குழந்தைகளுக்கும், சொத்தை பிரித்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி சொத்தை பிரித்து கொடுத்தபிறகு, பொது குடும்ப சொத்து இல்லை என்றால் சரியல்ல. சொத்தை பிரித்த பிறகு அது தனிப்பட்ட சொத்து என்றும், அது பொது குடும்ப சொத்து இல்லை என்றால் சரியல்ல. தனிப்பட்ட சொத்துக்களில் பிறப்பின் அடிப்படையில் நான் உரிமைகோர என்னால் முடியாது என்றால் சரியல்ல.

5. அண்ணாமலை முதலியார் இறந்த பிறகு, சொத்தை கூட்டாக அனுபவித்தார்களா அல்லது தனிப்பட்ட முறையில் அனுவித்தார்களா என்றால் கூட்டாக அனுபவித்தார்கள். அண்ணாமலை முதலியார் இறந்த பிறகு, சொத்துக்களில் ஒன்றாக விவசாயம் செய்தார்களா என்றால் வீடுதான் இருந்தது, மேற்படி வீட்டில் அனைவரும் ஒன்றாகத்தான் வசித்தார்கள். மொத்தம் எத்தனை வீடுகள் இருந்தது என்றால் 4 வீடுகள் இருந்தது. மேற்படி வீடுகளில் ஒன்றாக வசித்து வந்தார்களா என்றால் ஒன்றாகத்தான் வசித்து வந்தார்கள். எனது 4 தாத்தாக்களும் கூட்டாகத்தான் சம்பாதித்தார்களா என்றால் கூட்டாகத்தான் சம்பாதித்தார்கள். மேற்படி 4 தாத்தாக்களின் ஆண்டு வருமானம் தெரியுமா என்றால் தெரியாது. செலவு போக மீதி எவ்வளவு தொகை இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.
6. எனது சின்னத்தாத்தா ஆறுமுகம் வட்டாச்சியராக இருந்து ஓய்வு பெற்றார் என்றால் சரிதான். மேற்படி ஆறுமுகம் சம்பாதித்த தொகையை அவர் தனிப்பட்ட முறையில் அனுபவித்து வந்தாரா என்றால் இல்லை, கூட்டாகத்தான் அனுபவித்து வந்தார்கள். எனது மற்றொரு சின்னத்தாத்தாவான சிவராமன் இணை இயக்குநராக இருந்து ஓய்வு பெற்றார் என்றால் சரிதான். மேற்படி சிவராமன் சம்பாதித்த தொகையை அவர் தனிப்பட்ட முறையில் அனுபவித்து வந்தாரா என்றால் இல்லை, கூட்டாகத்தான் அனுபவித்து வந்தார்கள்.
7. அண்ணாமலைக்கு சொந்தமான 4 வீடுகளில் வசித்து வந்தபிறகு, அவர்கள் பிழைப்பிற்கு என்ன செய்தார்கள் என்றால் சிவராமன் மற்றும் ஆறுமுகம் ஆகியோர் அரசாங்க பணியிலும், மற்ற மூன்று தாத்தாக்களும், சந்தையில் வியாபாரம் செய்து வந்தார்கள். அண்ணாமலை முதலியாரின் சொத்துக்களை தனித்தனியாக அனுபவித்து வந்து அதை விற்பனை செய்தும், மற்ற வகையிலும், சொத்தை பெயர் மாற்றம் செய்துள்ளார்கள் என்றால் இல்லை.

8. சிவராமனும், ஆறுமுகமும் தனிப்பட்ட முறையில் சொத்துக்கள் வாங்கியுள்ளார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு 4வது அயிட்ட சொத்தானது சிவராமனின் மனைவியும், ஆறுமுகத்தின் மனைவியும் வாங்கிய சொத்து என்றால் இல்லை, அண்ணாமலை முதலியார் அவர் பெயரில் எழுதி வைத்த சொத்தாகும். அண்ணாமலை முதலியார் எப்போது இறந்தார் என்றால் ஞாபகமில்லை. அண்ணாமலை முதலியார் 10.02.1978ல் இறந்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு 4 வது அயிட்ட சொத்தை எப்போது கிரையம் வாங்கினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சொத்தை 22.08.1984ல் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அண்ணாமலை முதலியார் இறந்து சுமார் 6 வருடங்கள் கழித்துதான் வழக்கு 4 வது அயிட்டச் சொத்து வாங்கப்பட்டுள்ளது என்றும், ஆனால் நான் மேற்படி சொத்தை அண்ணாமலை முதலியார் வாங்கி வைத்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**( 2 முதல் 5, 10, 11 மற்றும் 13ஆம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)**